பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

University of Jaffna Sri Lanka
RECEIVED
1989-10-19
Periodicals Division
Library

இதழ்: 11 வியாழக்கிழமை 19-10-1989

## தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம்

(கொழும்பு நிருபர்)
நேற்று வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றக்குழு அறையில் கூடி தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் அமைப்புக் குழுவை ஏற்படுத்திக்கொண்டனர்.

தலைவராக ஜனுப் எம். எச்.

(4ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் நவம்பர் 15 வரவு-செலவுத்திட்ட உரை

(நமது கொழும்பு நிருபர்)
இலங்கைப் பாராளுமன்றத்தின் 1990-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரை கௌரவ பிரதம மந்திரியும், நிதி அமைச்சருமான ரி. பி விஜயதுங்க அவர்களால் நவம்பர் மாதம் 15-ந் திகதி மாலை 2-30

(4ம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கிலிருந்து ஸ்ரீலங்கா அரசு

# விசேட அதிரடிப் படைப் பிரிவை முற்றாக விலக்கிக்கொள்ளவேண்டும்

- வரதர்

(அம்பாறையிலிருந்து விஷேட நிருபர்)

**பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது போல வடக்கு கிழக்கு மாகணங்களில் தற்போது தங்கியுள்ள இலங்கை இராணுவத்தின் விசேட அதிரடிப்படை அம்பாறையில் இருந்து முற்றாக வெளியேற்றிய பின்பே இந்தியப்படை அம்பாறையில் இருந்து முற்றாக வெளியேறும் என மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.**

**இந்த இலங்கை இராணுவ விசேட படைப்பிரிவு இருக்கும்போது இந்திய படையை வெளியேற்றினுல் அப்பகுதிகளில் என்ன நிகழும் என்பதனை அனுபரீதியாக நாமறிவோம்.**

வடக்கு, கிழக்கில் உள்ள இந்திய அமைதிப் படை கட்டம் கட்டமாக வெளியேறும். இந்த வெளியேற்றம் முதலில் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் என்பதனை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது.

எனினும், இந்தியப்படை வெளியேறும் போது அப்பகுதி தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் என்ன? என்ற கேள்விக்கு நிதானமான பதிலை இலங்கை அரசு இதுவரை தெரிவிக்கவில்லை.

இலங்கை இராணுவத்தை அப்பகுதிகளில்ஈடுபடுத்தலாம் என தமிழ்குழு ஒன்று முதலில் கருத்து தெரிவித்தது. பின்பு இலங்கை இராணுவம் தமிழ்பகுதிகளில் நிற்பதனை நாம் எதிர்க்கவில்லை என்று கூறியது இதன்பின்னர் நாம் அப்படிக் கூறவில்லை என்றது.

இந்த நிலையில் இலங்கை அரசும் இந்திய படைவெளியேறும் பகுதிகளில் இலங்கை இராணுவத்தை நிறுத்த ஆலோசித்தது. ரஞ்சன் விஜேரத்ன இலங்கை இராணுவத்தை அந்த இடங்களில் நிறு

(4ம் பக்கம் பார்க்க)

காங்கேசன், தெல்லிப்பழை

## நகரங்களை மறுசீரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு நடவடிக்கை

(திருமலை)
வடக்கு கிழக்கு மாகாண உள்துறை அமைச்சு காங்கேசன்துறை, தெல்லிப்பழை நகரங்களைமறுசீரமைக்க 1.74 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

காங்கேசன்துறை நகர வீதி

(4ம் பக்கம் பார்க்க)

மட்டு விபுலானந்தர் கல்லூரி

## இசை பட்டதாரிகளுக்கும் இசை ஆசிரியர் நியமனம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு விபுலானந்தர் இசைக்கல்லூரியில் இசைப்பட்டம் பெற்ற மாணவர்களும் இசை ஆசிரியர் நியமனத்தில் இடம்பெறவுள்ளார்கள்.

மேற்படி கல்லூரியில் பட்டம்பெற்ற 26பேர் இசைஆசிரியர் பதவிக்கு நிராகரிக்கப்பட்டமை குறித்து மாவட்ட எம். பி. திரு. பிரின்ஸ் காசிநாதரின் கோரிக்கையை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராமநாதன் மகளிர் கல்லூரியில் பயிற்றப்படும் அதே இசைபீடத் திட்டமே விபுலானந்தர் கல்லூரியிலும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றதாகவும் இக்கல்லூரிப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் நிதிபுதவியினுல் அமைக்கப்பட்டதுடன் அரச அங்கீகாரம் பெற்ற ஆதிபர், விரிவுரையாளர்கள் பணிபுரிவதாகவும் திரு காசிநாதர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## மட்டக்களப்பில் கொள்ளை சம்பவங்கள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு பகுதியில் அண்மைக்காலமாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன

மட்டுநகரில் பதினைந்திற்கு மேற்பட்ட வீடுகளில் கடந்த மாதம் இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

நொச்சிமுனை என்னுமிடத்தில் திரு. கே. தம்பிப்பிள்ளை என்பவரின் வீட்டில் ஆயுதம் தாங்கிய ஏழுபேர் உட்புகுந்து அங்கிருந்தவர்களை மிரட்டி, ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட

## இளைஞர்கள், இளம் விதவைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படும்

(திருமலை)
கனடாவிலுள்ள அனைத்துலக பல்கலைக்கழக சேவை, சீடர் அமைப்பின் உதவியுடன் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் இளம் விதவைகளுக்கான தொழிற் பயிற்சியையும், கல்வியையும்வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. 1992ம்ஆண்டு வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 2500 பேர் இத்திட்டத்தின் மூலம் நன்மையடைவார்கள். இத்திட்டத்திற்கு 89 மில்லியன்

(4ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் நில அதிர்ச்சி

### 275 பேர் பலி. 400 பேர் காயம்

### கட்டடங்கள், பாலங்கள் இடிந்து வீழ்ந்தன!

### நெடுஞ்சாலைகள் பலத்த சேதம்!!

(வாஷிங்டன்)
அமெரிக்காவிலுள்ளசான்ஸ்பிரான்ஸிஸ்கோ, வடகலிபோர்ணியா ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நில அதிர்ச்சியினுல் இருநூற்று எழுபத்தைந்து பேர் இறந்துள்ளதாகவும், நாநூறுக்குமதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திடீர் நில அதிர்ச்சியினுல் பாலங்கள், கட்டிடங்கள், என்பன இடி விழுந்துள்ளதுடன் நெடுஞ்சாலைகள் பலத்த சேதமடைந்துள்ளன. இந்த இடிபாடுகளில் பலர் சிக்கியிருக்கிறுர்கள். இச் செய்தி எழுதும்வரை அவர்களின் நிலைகுறித்து பூரண தகவல் கிடைக்கவில்லை.

வட கலிபோர்னியாவில் நூற்றுக்கு மேற்பட்டவர்களும், சான்ஸ்பிரான்ஸிஸ்கோவில் முன்னூறு பேரும் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளபோதிலும் இச் செய்தியை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

சான்ஸ் பிரான்ஸிஸ்கோவிலுள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளதுடன்

(4ம் பக்கம் பார்க்க)

## கொள்ளையர்களிடம் திணறும் சாரதிகள்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி, மாங்குளம் பகுதிகளில் சாமான் ஏற்றி வரும் லொறிச் சாரதிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகிருர்கள். வீதியில் திடீர் திடீரென ஆயுதங்களுடன் தோன்றும் இளைஞர்கள், லொறிகளை மறித்துப்பொருட்களாகவும் பணமாகவும் கப்பம் கேட்கிருர்கள், இந்த நடுவழிக் கொள்ளையர்களிடம் நாளாந்தம் சிக்கித் திண்டாடும் லொறிச் சாரதிகளில் சிலர் ''சென்ற பயணம் வந்த போதும் சாமான்கள் தந்திருக்கிறோம், இந்தத் தடவை எங்களை விட்டுவிடுங்கள் இல்லாவிட்டால் இந்த இழப்பை எங்களால் தாங்க முடியாது'' என்று முறையிட்டு அழுதால், கண்மண் தெரியாத அடி உதைகளும், கட்டாயப் பறிப்பும் நடைபெறுகிறதாம். இவ்வாறு

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியருக்கு கடிதம்

# வைத்திய அதிகாரி இல்லாது வைத்தியசாலை இயங்குகிறது

ஆசிரியர்
விடுதலை

ஐயா,

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய ஆஸ்பத்திரியில் கடநத ஜனவரி மாதம் முதல் இன்னமும் ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி நியமிக்கப்படவில்லை. இங்கு பணிபுரிந்த பொறுப்பதிகாரி காரைநகர் அரசினர் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதிலிருந்து இப்பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை. தற்போது ஒரே ஒரு பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி (ஆர். எம். பி.) மாத்திரமே தனித்து இங்கு பணிபுரிகிறார் பல நோயாளர்களையும், ஆஸ்பத்திரி நிர்வாக வேலைகளையும் இவர் ஒருவரே கவனிக்க வேண்டியுள்ளது சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

இப்படிக்கு,
சி வல்லிபுரநாதன்,
வட்டுக்கோட்டை.

# பஸ்நிலையத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

ஆசிரியர்
விடுதலை

ஐயா,

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் இன்னும் டச்சுக்காரர் கால பஸ் நிலையமாகவே காணப்படுகிறது.

1974ல் அன்றைய போக்குவரத்து அமைச்சர் கே. பி. ரட்ணயக்கா இங்கு வந்தபோது பஸ் நிலையத்தை திருத்தியமைப்பதாக கூறினார் வடபகுதி எம். பிக்களும் இதனைத் திருத்த நடவடிக்கைகள் எடுத்தனர் ஆனால் நாட்டு நிலைமையால் இன்னமும் அது திருத்தப்படவேயில்லை.

போக்குவரத்துச்சபை ஊழியர்களும் அதிகாரிகளும் இருக்கும் இடமும் இன்றும் தகரக்கொட்டகை. பயணிகள் உச்சி வெயிலின் போது தகரக்கொட்டகையிலேயே நிற்கின்றனர். மழை பெய்தால் நனையவேண்டும் அதுமட்டுமல்ல பஸ் நிலையத்தில் ஒரே பள்ளம் மழை பெய்தால் குளம் மாதிரி இருக்கும்.

வவனியாவுக்கு அப்பால் சென்று பார்த்தால் பல பஸ் நிலையங்கள் எப்படி இருக்கிறது என்பதை அறியலாம். தெற்கில் ஒன்று வடக்கில் ஒன்று? நாட்டுப் பிரச்னை என்ற காரணத்தைக் கூறும் அதிகாரிகள் தற்போதைய சூழ்நிலையில் இதனைத்திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். மாகாண அரசு என்றாலும் இதில் தலையிடவேண்டும்.

இப்படிக்கு.
எஸ். கந்தசாமி
யாழ்ப்பாணம்.

## முதலாம் பரிசு தங்கப் பதக்கம்

# அக்கராயன்குளத்தில் மாட்டு வண்டில் சவாரி

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி அண்மையில் அக்கராயன் குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடபெற்றது

ஏ, பி, சி, என்ற மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்போட்டியின் 'ஏ' பிரிவில் போட்டியிட்டு முதலாம்இடத்தைப் பெற்ற ஸ்கந்தபுரம் வாசியான திரு. சு. ஜெகதீஸ்வரனுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தை திரு ச . லிங்கராசாவும் [சாவகச்சேரி) மூன்றும்இடத்தை திரு பொ பாலனும் (சாவகச்சேரி) பெற்றுக்கொண்டனர்.

'பி' பிரிவில் முதலாம் இடத்தை திரு க. ஜெய்சங்கர் (கோட்டை கட்டியகுளம் இரண்டாம் இடத்தை திரு. ஆ. மணியம் (பூநகரி), மூன்றும் இடத்தை திரு. நா வை. மூர்த்தி (ஸ்கந்தபுரம்) பெற்றனர்.

'சீ' பிரிவில் முதலாம் இடம் திரு. ஐ பாஸ்கரன் (பூநகரி), இரண்டாம் இடம் திரு. க குலேந்திரராசா (பூநகரி], மூன்றும் இடம் ஆ. மணியம் (பூநகரி).

சகல பிரிவுகளிலும் நான்காம் இடத்தைப் பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# முறைசாரா கல்வி வளத்திற்கு ஆய்வறிக்கைகள் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு அதன் வளநிலையத்தில் பயன்படுத்துவதற்காக ஆய்வறிக்கைகளைச் சேகரிக்கவுள்ளது.

முறைசாராக் கல்வியைத் திட்டமிடவும், அறிக்கைளைத் தயாரிக்கவும், தொழில் வழிகாட்டவும் இவை பயன்படுத்தப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அபிவிருத்தி கருதி இவ்வறிக்கைகளை அளிக்க விரும்புபவர்கள் முறைசாராக் கல்விப் பிரிவில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆய்வறிக்கைகள் கீழ்வரும் தலைப்புகளில் சுருக்கமாகத் தயாரித்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

### கல்வி சார்ந்தவை

யாழ். குடாநாட்டுப் பொருளாதார விருத்தியில் வர்த்தக கல்வியின் பங்களிப்பு எவ்வாறு அமையலாம். பிரதேச பொருளாதார விருத்தியில் சமூகக் கல்வியின் பங்களிப்பு எவ்வாறு அமையலாம். மாணவர்களை வாழ்க்கைக்கு ஏற்றவர்களாக்குவதில் தற்போதைய கல்வியின் பங்களிப்பு, பிரதேச விருத்தியில் பல்கலைக்கழககல்விநெறிகளின் பங்களிப்பு பிரதேசப் பொருளாதார விருத்திக்குப்பொருத்தமான தொழிற் பயிற்சிகள், (அ) பொதுக் கல்வி கற்ற மாணவர் க. பொ. த. [ச. த.], (ஆ) பாடசாலையை விட்டு இடையில் விலகியோர் இவர்களுள். வேலையற்றோருக்கும் தொழிலுலகத்துக்கும் இடையிலான வெளியைக் குறைக்கும் வழிகள் (இ) உயர்தரக்கல்வியை முடித்துக்கொண்டே மாணவர் க பொ. த. (உ. த.) (ஈ) பல்கலைக்கழக கல்வியை முடித்துக்கொண்ட மாணவர், பாடசாலையில் படிக்கும் போதே உழைப்பதால் கல்வியில் ஏற்படக்கூடிய தாக்கங்கள், பாடசாலைக் கல்வியை விட்டு மாணவர் இடையில் விலகுவதால் ஏற்படக்கூடிய தாக்கங்களும், இடைவிலகலைக் குறைக்கும் வழிகளும், பல்கலைக் கல்வி வாய்ப்புகளை இழந்த மாணவர்களின் சமூகப் பொருத்தப்பாடு. கல்வி நோக்கங்களை நிறைவு செய்வதில் ரியூசன் கல்வியில் தாக்கங்கள், தொழிற் திறனபிவிருத்தி பயிற்சிபெற்ற மாணவன் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும். பாடசாலைக் கல்வியில் தொழில்வழிகாட்டலின் முக்கியத்துவம், மாணவர்களின் தனி ஆற்றலை விருத்தி செய்வதில் பாடசாலைகளின் பொருத்தமான பங்களிப்பு, கல்வியின் நோக்கங்களை நிறைவு செய்வதில் தற்போதைய பொதுக்கல்வியின் பங்களிப்பு, யாழ். மாவட்ட மாணவர்களுக்கு பொருத்தமான தொழில வழிகாட்டல் ஆலோசனைகள்.

### பொருளாதார விருத்தி சார்ந்தவை:

யாழ். மாவட்டத்தின் மூல வளங்களும் அவற்றின் பொருளாதாரப் பயன்பாடுகளும், யாழ். மாவட்ட மூல வளங்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய உற்பத்திப் பொருட்களும் அவற்றிற்கான சந்தை வாய்ப்புக்களும், யாழ் மாவட்டத்தில் ஆரம்பிக்கக்கூடிய சிறு கைத்தொழில்களும் அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளும், யாழ். மாவட்ட சிறு தொழில் நிலையங்கள் எதிர் நோக்கும் தொழில் சார்ந்த பிரச்சனைகளும் அவற்றுக்கான தீர்வுகளைக் காணும் வழிகளும், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதில் வர்த்தகர் சங்கங்களின் பங்களிப்பு, உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு, யாழ். மாவட்டத்தில் சிறு தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு, யாழ். மாவட்ட அபிவிருத்தியில் உள்ளூர் ஆய்வாளரின், நிபுணர்களின் பங்களிப்புகள், யாழ். மாவட்ட சிறு தொழில் விருத்தியில் அரச சார்பற்ற பொதுநிறுவனங்களின் பங்களிப்பு, யாழ். மாவட்ட பொருளாதார விருத்தியில் உள்ளூர் அரச ஸ்தாபனங்களின் பங்களிப்பு.

யாழ்ப்பாணப் பொருளாதார விருத்தியில் பொருளாதாரக் கல்வியின் பங்களிப்பு, மாணவரின் பொருளாதார விருத்திக்கேற்ற விஞ்ஞானக் கல்விக்கான புனரமைப்பு.

### பொது

வீட்டுப் பொருளாதார வளர்ச்சியில் இன்றைய இளம் பெண்களின் பங்களிப்பும் பொருத்தப்பாடும். மூளைசாலிகள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்குக் கல்வித்துறை ஆற்றக்கூடிய பணிகள். வெளிநாட்டுக்கு உழைக்கச் சென்றவர்களால் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார விளைவுகள், மூளைசாலிகள் வெளியேற்றத்தால் யாழ். மாவட்டம் அடைந்துள்ள தாக்கங்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு மாணவரைத் தயார் படுத்துவதால் யாழ். மாவட்டத்தில் ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கம். மாணவர்களை வாழ்க்கைக்கு ஏற்ற பூரண மனிதராக்குவதில் தற்போதைய கல்வியின் பங்களிப்பு.

# வைரவர் விழா

(யாழ்ப்பாணம்)

பன்னாலை மயிலையம்பதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய 'நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம்' எதிர்வரும் 21-ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

20-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விக்கினேஸ்வர பூசையுடன் கிரியாகால நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாகபூசை, முற்பகல் 11 மணிக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிடேகம், நண்பகல் 1 மணிக்கு மகேஸ்வரபூசை, பிற்பகல் 3 மணிக்கு மணவாளக் கோலத்துடன் திருவீதியுலா நடைபெறும்.

## பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை

# ரயில்சேவையை சீராக்க இராணுவ பாதுகாப்பு தேவை

(கொழும்பு)

ரயில் சேவையை சீராக நடாத்த ரயில்களுக்கு பாதுகாப்பு அளிக்க சுமார் இரண்டாயிரம் இராணுவத்தினர் தேவை என ரயில்வேப் பகுதி பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்துள்ளது.

வழமையான நாட்களில் ரயில்வே திணைக்களம் நாற்பத்தாறு ரயில்களைச் சேவையில் ஈடுபடுத்துகிறது, என்றும் அவற்றுக்கும் ரயில் நிலையங்களுக்கும் பாதுகாப்பு அளிக்க ராணுவ வீரர்கள் தேவை எனவும் ரயில்வே பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை பன்னிரண்டு ரயில் நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளது பிரதான ரயில் நிலையம் ஒன்று மூடப்பட்டுள்ளது. சில ரயில் பாதைகள் தினமும் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ பாதுகாப்பு இல்லாவிட்டால் தற்போது இயங்கும் ஒருசில சரக்கு எரிபொருள் ரயில்களும் நிறுத்தப்படவேண்டிவரும் எனவும் அந்த அதிகாரி சொன்னார்.

இதேவேளை படையினரின் பாதுகாப்பு நடவடிக்கையால் ரயில் பயணிகளிடம் கொள்ளைச் சம்பவங்களும் குறைந்துள்ளன.

## போக்குவரத்துச் சபைகளின் ஊழியர்களால்

# 15 லட்சம் ரூபாவை தினமும் இழக்கவேண்டியேயுள்ளது

(கொழும்பு)

நாட்டிலுள்ள போக்குவரத்துச் சபைகளின் வருமானத்தில் 15 லட்சம் ரூபா நாளாந்தம் மோசடி செய்யப்படுவதாகப் போக்குவரத்து அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போக்குவரத்துச் சபைகளின் வருமானத்தில் 20 சத வீதம் குறிப்புக்களில் அடங்குவது இல்லையெனப் போக்குவரத்து அமைச்சர் அண்மையில் செய்தியாளரிடம் கூறியதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

டிக்கட் புத்தகங்கள் ஏனைய குறிப்பு ஆதாரங்களின்படி போக்குவரத்துச் சபைகளின் நாளாந்த வருமானம் 60 லட்சம் ரூபாவாகும் எனவும் அவர் சொன்னார்.

உண்மையான வருமானத்தில் 20 சதவீதம் குறிப்புக்களில் அடங்காததால் 60 லட்சம் ரூபா என்பது உண்மையான வருமானத்தில் 80 சத வீதமாகும். இதன்படி சபைகளின் மோசடியால் தினமும் 15 லட்சம் ரூபா இழக்கப்படுகிறது.

பயணிகளுக்கு டிக்கட் வழங்காமை, வழங்கிய டிக்கட்டுகளை மீளப்பெற்று பயணிகளுக்கு வழங்குதல் போன்றவற்றில் பஸ் நடத்துனர்கள் தினமும் அகப்படாமல் மோசடி செய்கின்றனர்.

மேலும் டிக்கட் மெஷின் கோளாறுகள், டிப்போக்களில் இடம்பெறும் ஊழல்கள் என்பவற்றாலும் சபைகள் இவ்வாறு வருமானத்தை இழந்து வருகின்றன எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

# சங்கப்பணம் துஷ்பிரயோகம்

## விசாரணை தொடர்ந்து நடக்கிறது

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கப் பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதா? என்பதனை ஆராய விசாரணை ஒன்று நடைபெறுகிறது.

மேற்படி சங்கப்பணம் தேவையில்லாத வகையில் செலவு செய்யப்பட்டுள்ளது. கையெழுத்து ஏதும் இல்லாத மொட்டைத் துண்டுப் பிரசுரம் ஒன்று தெரிவித்த தகவலை அடுத்தே இந்த விசாரணைகள் நடைபெறுகிறது.

மேற்படி சங்க முன்னாள் தலைவர், முகாமையாளர், பதில் முகாமையாளர் ஆகியோர் இவ்விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். விசாரணையைகூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட ஒருவர் நடாத்திவருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எந்த அபாயத்தையும் சமாளிப்பதற்கு இந்திய இராணுவம் தயாராகவுள்ளது"

## - இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி

(புதுடில்லி)

"நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய எந்த அபாயத்தையும் சமாளிக்க இந்திய இராணுவம் தயாராக இருக்கிறது" என்று பிரதமர் ராஜீவ் காத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

திரு. ராஜீவ் காந்தி மேலும் பேசுகையில் கூறியதாவது. தனது பாதுகாப்புப் பட்ஜட்டினை இந்தியா குறைத்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், பாகிஸ்தான் நவீன ரக ஆயுதங்களை சலுகை விலையில் பெற்றுவருகிறது ஆயினும் எந்த நிலைமையையும் சமாளிக்கும் அளவுக்கு நமது இராணுவம் வலிமையாகவுள்ளது.

சீனவுடன் உறவு மேம்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், சீனப் பிரதமருடன் நடந்த சந்திப்புப் பற்றி திருப்தி தெரிவித்தார்.

உலக விவகாரங்களில் இந்திய-சீன அணுகுமுறை ஒரே மாதிரியாக இருப்பதாகவும், மிகச் சிக்கலான பிரச்னைகளுக்குக்கூட தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை இந்த நல்லுறவு ஏற்படுத்தியுள்ள தாக அவர் கூறினர்

ரஷ்யாவுடன் இந்தியாவுக்கு மிக அற்புதமான உறவு இருப்பதாகத்தெரிவித்த திரு ராஜீவ் காந்தி இது கடந்த 5 ஆண்டுகளில் மகத்தான வகையில் மேம்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்னை பற்றிக் குறிப்பிட்ட அவர். தமிழர்களுக்கு அதிகாரப் பங்கீடு வழங்குதல், பாதுகாப்பு அளிப்பது தொடர்பான உறுதி மொழிகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்பதனைத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

இலங்கை, மாலைதீவு மற்றும் சியாசின் சம்பவம் ஆகியவற்றில் இந்திய இராணுவத்தினர் சிறந்த பணி புரிந்துள்ளதாக அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

## வைத்தியசாலை புனரமைக்கப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளை புனரமைக்க 1.95 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி முல்லை மாவட்ட வைத்தியசாலை மருத்துவ அதிகாரி விடுதி முள்ளியவளை மத்திய மருந்தகம், புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலை, ஒட்டுசுட்டான், மாங்குளம், துணுக்காய் ஆகிய இடங்களிலுள்ள மத்திய மருந்தகம் மல்லாவி வைத்தியசாலை ஆகியவற்றில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளது.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார பரிசோதகர் திரு. செ. செல்வரத்தினம் பதவிஉயர்வு பெற்றுள்ளார்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவு மேற்பார்வை சுகாதார பரிசோதராக கடமையாற்றிய இவர் பதவி உயர்வு பெற்ற பின்னர் யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளா அலுவலகத்தில்கடமையாற்றி வருகின்றார்.

தென்னிந்திய

# அணுகதிர்வீச்சை அவதானிக்க இலங்கையில் நிலையம்

(கொழும்பு)

இந்தியா உட்பட இலங்கைக்கு அருகாமையில் உள்ள நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்களின் கதிர்வீச்சு இலங்கையைப் பாதிக்கும் என்ற அச்சத்தைப் போக்க இலங்கை அணுசக்தி கண்காணிப்பு நிலையத்தை அமைந்துள்ளது.

இந்தியாவில் ஆயிரம் மெகோவாட் அனுசக்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளமையும் இலங்கைக்கு இதனல் ஏற்படக்கூடிய தீயவிளைவுகள் பற்றி அச்சம் தெரிவிக்கப்பட்டு வருகின்றமையும் தெரிந்ததே.

தென்னிந்தியாவில் அமைந்துள்ள இரண்டு அணுசக்தி உலைகளில் ஏதேனும் கசிவு ஏற்படுமாயின் அதனல் ஆபத்தான விளைவுகள் இலங்கைக்கு ஏற்படக்கூடுமெனவும் இவைகளை தடுத்து நிறுத்தக் கூடிய சட்டங்கள் எதுவும் இல்லை எனவும் தீயவிளைவுகளை கட்டுப்படுத்தி விட முடியாது எனவும் பல அறிக்கைகள் வெளியாகிய பின்னரேயே இலங்கையின் அணுசக்தி அதிகாரசபை கதிர்வீச்சு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அணுசக்தி கண்காணிப்பு நிலையத்தை தற்போது அமைத்துள்ளது

# ஏழரை லட்சம் ரூபாவுக்கு மேற்படாத ஒப்பந்த வேலைகளைச் செய்ய ச.ச.நிலையங்களுக்கு அனுமதி

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியைப் பெற்று ஏழு லடசத்து ஐம்பதினுயிரம் ரூபா செலவிலான ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

இந்த ஒப்பந்த வேலைகளைப் பிரதேச சபை மூலம் சனசமூக நிலையங்கள் பொறுப்பேற்றுச் செய்வதன் மூலம் சனசமூக நிலையங்கள் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பந்தம்மூலம் பெறப்படும் இலாபப் பணம் கிராம முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை ஐம்பதினுயிரம் ரூபாவுக்கு உட்பட்ட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு மட்டுமே உள்ளூராட்சி திணைக்களம் சனசமூக நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

அவ்வப்பகுதி பிரதேச சபைகளினல் ஒப்பந்த வேலைகள் வழங்கப்படும்

## கடும் வரட்சி

(மன்னர்)

மன்னர் பகுதியில் தற்போது கடும் வரட்சி நிலவுகிறது. கிணறுகள், குளங், குட்டைகளும் நீரின்றி வற்றி விட்டன. இதனல் இங்குள்ள மக்களும் கால்நடைகளும் அலைந்து திரிகின்றனர். விவசாயிகளும் இதனல் பாதிப்படைந்துள்ளனர்.

மின்கம்பிகள் வெட்டப்பட்டதால்

# பல இடங்களில் மின்தடை

(பண்டத்தரிப்பு)

மீண்டும் மின்சாரம் வட பகுதிக்கு கிடைத்துள்ள போதிலும் பல இடங்களில் மின்சாரம் சீராக கிடைக்க வில்லை. மின்சாரம் இல்லாதிருந்த சில மாதங்களில் மின் கம்பிகள் வெட்டப்பட்டு திருடப்பட்டதே இதற்கு காரணமாகும்.

இதனல் சில இடங்களில் தொழிற்சாலைகள், மில்கள், கராஜூகள், விவசாயிகளின் மின்மோட்டர்கள்இயங்கமுடியாத நிலையில் இருககின்றன.

மின்சார சபையினரும் இதற்கு என்ன செய்வதெனப் புரியாது உள்ளனர். இதே போல மீண்டும் சில இடங்களில் சட்டவிரோத மின்பாவனையும் தொடங்குகிறதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

மின்சாரம் பொதுமக்களுக்கு. எனவே சட்டவிரோத மின்சாரத்தை பொதுமக்கள் ஒத்துழைத்தால் சுலபமாக நிறுத்தலாம். எனவும் இல்லையேல் சபையால் முடியாது எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# பம்பாய்வெங்காயச் செய்கை பெருமளவில் வீழ்ச்சி

(பருத்தித்துறை)

யாழ் மாவட்டத்தில் பம்பாய் வெங்காயச் செய்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என விவசாயப் பகுதியினரின் கணிப்புகளிலிருந்து தெரியவருகிறது.

சீரற்ற காலநிலை, பங்கசு நோய் என்பவற்றலேயே இவ்வுற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது கடந்த காலங்களில் ஏக்கருக்கு 150 அந்தருக்கு குறையாமல் விளைச்சல் ஏற்பட்டது ஆனல் இம்முறை ஏக்கருக்கு எழுபத்தைந்து அந்தருக்கும் குறைவாகவே விளைச்சல் கிடைத்துள்ளது.

அராலிப் பகுதியிலேயே பம்பாய் வெங்காயச் செய்கை கூடுதலாக மேற்கொள்ளப்படுகிறது ஆனல் இம்முறை இங்கும் குறைந்தளவே இது உற்பத்தியானது

இதனல் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

சம்பவம் நடந்து 12 வருடங்கள்

# கற்பழிப்பு வழக்கில் 3 எதிரிகளுக்கு சிறைவாசம்; பெண்ணுக்கு நட்டஈடு!

(கொழும்பு)

23 வயது பருவ மங்கை அவள், பார்ப்போரை வசீகரிக்கும் அழகிய தோற்றம் உடைய ஆரணங்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

அவளது எதிர்காலக் கணவன், சிநேகிதி ஆகியோர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தனர். பொழுதுபோனதுகூடத் தெரியவில்லை அவர்களுக்கு.

சிநேகிதிக்கு தனது வீட்டிற்கு போகவேண்டிய அவசரம் ஏற்பட்டது. உடனே எதிர்காலக் கணவனையும் அழைத்துக்கொண்டு சிநேகிதியை வழியனுப்புவதற்கு பஸ்நிலையம்வரை சென்றாள்.

சிநேகிதி பஸ்ஸில் ஏறிவிட்டாள். பஸ் மறையும் வரை நின்று அவளை வழியனுப்பிவைத்துவிட்டு இருவரும் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

நேரம் இரவு 8 மணி. ஆள் நடமாட்டமோ வாகன இரைச்சலோ இல்லாத தனி வழி அது. ஒருவர் தோழுடன் ஒருவர் சாய்ந்தவாறு அவளும் அவனும் வந்து கொண்டிருந்தனர்.

அரைவாசித் தூரம் வந்து விட்டார்கள். வாள், கத்தி, துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் மூவர் இருவரையும் வழிமறித்து அந்தப் பருவ மங்கையை இழுத்துச் செல்ல முயற்சித்தனர். விடுவானு அந்தக்காளை முடிந்த மட்டும் மூவருடனும் மூர்க்கத்தனமாக மோதினுன் அவனுல் வெல்ல முடியவில்லை.

பயத்தினுல் நடுங்கிக்கொண்டிருந்த அவளை தூக்கிக் கொண்டுபோய் ஒருவன் 'சென்றி' நிற்க மற்ற இருவரும் மாறி மாறி பலாத்காரம் புரிந்தனர்.

கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர் 1977 டிசம்பர் 15-ம் திகதி அன்று தென்கொழும்பு களுபோகிலவில் பிரதிபிம்பாளும் வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

இச்சம்பவம் குறித்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினையடுத்து பொலிசார் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்மீது வழக்குத் தொடர்ந்தனர்.

திரு. எம். விஜிதபால, திரு ஏ. எல். அமரதாசா, திரு. ரி. ஏ. தயாரத்ன (சூட்டி) ஆகியோர் இவ்வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டனர்.

எதிரிகள் மூவருக்கும்கொழும்பு மேல்நீதிமன்றத்தால் ஏழாண்டுகளுக்கு இடைநிறுத்தப்பட்ட தலா இரண்டு வருட கடூழியச் சிறைவாச தண்டனை வழங்கப்பட்டது.

மானபங்கத்திற்கு ஆளாகிய பெண்மணிக்கு முதலாம், இரண்டாம் எதிரிகள் தலா ஐயாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் கொடுக்கத் தவறினல் தலா மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மூன்றும் எதிரி பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு ஆயிரத்துஐந்நூறு ரூபா வழங்க வேண்டும். இல்லையெனில் ஒருவருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

# காங்கேசன் கொத்தணியில் 77 ஆசிரிய வெற்றிடங்கள்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைக் கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளில் 77 ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிய வந்துளளது.

காங்கேசன்துறை கொத்தணிப் பாடசாலைகளில் மாணவர் தொகைக்கேற்ப அமைச்சின் கணிப்பீட்டு அளவுத்திட்டத்தின்படி வெற்றிடங்கள் கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வெற்றிடக் கணிப்பீடு 06-06-1989 ஆம் திகதியின்படி மேற்கொள்ளப் பட்டதாகவும், இதற்குப் பின்பு பதவியில் இருந்து விலகிச் சென்றோர், ஓய்வுபெற்றோர் என்னும் விதத்தில் வெற்றிடம் அதிகரித்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருட இறுதிக்குள் இன்னும் பலர் ஒய்வு பெறும் நிலையில் உள்ளதாகவும் இதனல் வெற்றிடங்கள் மேலும் அதிகரிக்கும் எனவும் எதிர்பாக்கப்படுகிறது.

## ஒதுக்கீடு

(மானிப்பாய்)

உடுவில் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான ஒரு கட்டடத்தை அமைக்க வடக்கு கிழக்கு மாகாண அரசு சுமார் மூன்றரை லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது

தற்போது இந்த ஆஸ்பத்திரி தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது. தற்போது நோயாளர் வரவும் இங்கு அதிகரித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

## மலையகம் விழித்தெழ வேண்டும்!

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதச் சம்பவங்களைக் காரணமாகக் கொண்டு, மலையக தோட்டங்களில் வாழும் சமூகப்பற்றுக்கொண்ட இளைஞர்களை போலிக் குற்றச்சாட்டின் பேரில் நாளாந்தம் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைக்கின்றனர்.

மலையகத்தின் பிரதான நகரங்களான ஹட்டன், நுவரெலியா, பதுளை, மாத்தளை போன்ற பகுதிகளில் இத்தகைய அடாவடித்தனங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மலையகத்தில் தொழிற்சங்கத் துறையில் ஏகபோகம் செலுத்தும் ஒரு பிரிவினர், ஆளுங்கட்சிக்கான தமது விஸ்வாசத்தைத் தெரிவிப்பதற்கு மலையக இளைஞர்களைப் பணயம் வைக்க முற்படுகின்றனர். மலையக மக்களை உணர்வுபூர்வமாக நேசிக்கும் இளம் சந்ததியினரைப் பூண்டோடு அழிக்கச் சபதமேற்றுள்ளனர் போல் தெரிகின்றது.

சென்ற பொதுத்தேர்தலில் மலையகத்தின் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெற முடியாமல் மூக்குடைபட்ட இவர்கள், ஆளும் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்தில் நுழைந்திருந்து கொண்டு. மலையகத்தின் ஏகப் பிரதிநிதியாக இன்னமும் பேசுவது வேடிக்கைக்குரியது.

யு என் பி. அரசு அப்பாவி மலையக இளைஞர்கள்மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி கைது செய்ய எடுக்கும் முயற்சிகளை 'விடுதலை' வன்மையாகக் கண்டிக்கிறது.

இழப்பதற்கு எதுவுமற்ற இம்மக்களை யாரும் எடுப்பார் கைப்பிள்ளை போன்று ஆட்டிப்படைக்க எண்ணுவது வீண் விபரீதங்களை ஏற்படுத்தவே உதவுமென எண்ணுகின்றோம்.

மலையக மக்களும், இளைஞர்களும் இத்தகைய பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்களேயாயின், மலையகத்தில் புதிய வரலாறு படைப்பர்

### கொள்ளையர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையர்களினால் தாக்கப்பட்டு காயங்களுடன் யாழ்ப்பாணம் வந்த லொறிச் சாரதிகள் 'விடுதலை'க்குத் தெரிவித்தனர்

### தமிழ்பேசும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். அஷ்ரப் எம். பி. யும், செயலாளராக திரு க. நவரத்தினம் எம். பி யும், குழு உறுப்பினர்களாக திரு. வி. கே யோகசங்கரி எம். பி., திரு. கே, திவ்வியநாதன் எம். பி. அல்ஹாஜ் எம் எஸ் எம். அபூபக்கர் எம். பி ஆகியோரும பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இக்குழுவின் கூட்டம் மீண்டும் எதிர்வரும் 8-ம் திகதி நடைபெறவுள்ளது.

### காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை மறுசீரமைக்க 4 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவும் தெல்லிப்பளை நகர வீதிகளை மறுசீரமைக்க 4 இலட்சத்து 30ஆயிரம் ரூபாவும்செலவிடப்படவுள்ளது

அரசதுறை சார்ந்த கட்டிடங்களை அமைப்பதற்கு காங்கேசன்துறைக்கு 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் தெல்லிப்பழைக்கு 1லட்சத்து 91 ஆயிரத்து 800 ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளது

### பாதிக்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கெயர் ஸ்தாபனம் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 2500 பேர் இத்திட்டத்தின்மூலம் நன்மையடைவார்கள். இத்திட்டத்திற்கு 89 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கெயர் ஸ்தாபனம் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, ஆகிய மாவட்டங்களில் தொழிற்பயிற்சி திட்டங்களை வகுத்துள்ளது. மேசன் வேலை தச்சு வேலை, குழாய் பொருத்துதல், மின்னிணைப்பு வேலைகள் ஆகியவற்றில் மூன்று வருட பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது இதற்காக 16மில்லியன் ரூபாவை நோராட் நிறுவனம் வழங்கியுள்ளது.

வருமானம் தரக்கூடிய சிறு கைத்தொழில் முயற்சிகளில் முதலீடுவதற்காக 11, 000 (பதினோராயிரம்) இளைஞர்களுக்கு 5000 ரூபாவையும் கடனுதவிகளை அரசுசார்பற்ற நிறுவனங்களுக்கூடாகவழங்க ஜடா நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்காக 56 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

## வேலைவாய்ப்புக்காக சென்றவர்கள்; சிங்கப்பூரிலும்மலேசியாவிலும் 27 இலங்கையர்கள் நிர்க்கதி!

(கொழும்பு)

வேலைவாய்ப்பு பெற்று தருவதாக முகவர்களினால் அழைத்துச் செல்லப்பட்ட 27 இலங்கையர்கள் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் கைவிடப்பட்டுள்ளார்கள்.

நிர்க்கதியாக்கப்பட்டுள்ள இவர்கள் இது தொடர்பாக சிங்கப்பூர் பொலிஸ் நிலையமொன்றில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இலங்கையிலுள்ள உள்ளூர் முகவருக்கு ஐம்பதினாயிரம் ரூபாவும், வெளியூர் முகவர்களுக்கு ஆறாயிரம் டொலர்களுக்கும் கொடுத்துள்ளதாகவும் ஆனால் இதுவரைக்கும் தமக்கு வேலைவாய்ப்பு எதுவும் பெற்றுத்தராமல் ஏமாற்றிவிட்டதாகவும் அவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்,

இந்த இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் இலங்கை தொழில் அமைச்சகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது

### தொழில் அமைச்சு அறிக்கை

இது தொடர்பாக தொழில் அமைச்சு அறிக்கையொன்றினையும் வெளியிட்டுள்ளது

மலேசியாவிலும் சிங்கப்பூரில் வீட்டுப்பணிப் பெண்களுக்கு மாத்திரமே வேலைவாய்ப்பு இருக்கிறது ஆண்களுக்கு அங்கு எந்தவிதமான வெற்றிடங்களும் இல்லையென தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நாடுகளில் தொழிலை பெற்றுத்தருவதாகக் கூறும் போலி முகவர்களையும் நம்ப வேண்டாமென்றும் மேற்படி அமைச்சு அறிவித்துள்ளது.

## நேரம் தெரியாது பயணிகள் அலைகிறார்கள்
## யாழ்தேவி காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் வருகிறது

(சுண்டுக்குளி)

கொழும்புக்கான யாழ்தேவி யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு காலை ஏழு மணிக்கு வருவதாகவும் நேரம் பிந்தி வந்து பல பயணிகள் ஏமாந்து வருவதாதவும் ரயில்வேப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலை 6-30 மணிக்கு ரயில் ரிக்கற் வழங்கப்படுவதாகத் தெரிந்த அவர் பயணம் செய்வற்கு முதல் நாள் காலை ஒன்பதரை மணி முதல் ரிக்கற் வழங்கல் மற்றும் ஆசனப்பதிவு நடைபெறுவதாகவும் சொன்னார்.

ஆனால் 'சிலிப்பறேற்ஸ் புக்' பண்ணத் தினமும் சிலர் வந்து (புரோக்கர்மார்) தமக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதாகவும் 'சம்திங்' தர முயலுவதாகவும் குறிப்பிட்டார்.

எல்லோரும் அமைதியாகவும் கியூவில் நின்றும் ஒத்துழைத்து இவற்றைப் பெற்றுக் கொண்டால் எந்தவித பிரச்சினைகளும் ஏற்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### லஞ்ச திணைக்கள பெண் ஆணையாளர்

(கொழும்பு)

லஞ்சத் திணைக்களத்தில் கடந்த பதினைந்து வருடங்களாக உதவி லஞ்ச ஆணையாளராகவும், பிரதி லஞ்ச ஆணையாளராகவும் கடமைபுரிந்த திருமதி நெலும் கமகே லஞ்ச ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் லஞ்ச ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது பெண்மணி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நகரத்துடனை சகல போக்குவரத்து தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்நில அதிர்ச்சியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு உதவி வழங்கும் பணியில் அமெரிக்க அரசு ஈடுபட்டுள்ளது.

### சிறு செய்திகள்

°° நேற்று முன்தினம் ஏறுவூரில் றஸாத் என்பவரை ஆயுதம் தாங்கிய குழுவினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

°° தலைமன்னாரில் கஜேந்திரன் என்பவர் இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

°° நேற்றுக் காலையில் மன்னார் 5-ம் கட்டையில் செல்வம் என்பவரை ஆயுதக்குழுவினர் பஸ்ஸிலிருந்து இறக்கிச் சென்றுள்ளனர்.

°° நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற பஸ்ஸை 50 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய குழு ஒன்று மறித்து பயணிகளிடமிருந்து பணம், நகை என்பவற்றை அபகரித்துள்ளனர். இவ்வழிப்பறிக் கொள்ளையின்போது பஸ்ஸில் சென்ற ஒருவர் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

°° நேற்று முன்தினம் யாழ். பெரியாஸ்பத்திரியில் 'பைப்' கழற்றிக்கொண்டிருந்த திருடன் ஒருவரைப் பொதுமக்கள் தொண்டர் படையினர் கையும் களவுமாகப் பிடித்துள்ளனர்.

### பாராளுமன்றத்தில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதன்மீதான விவாதம் நவம்பர் 27-ந் திகதி தொடங்கி டிசம்பர் 22 இல் முடிவடையும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 19-10-1989ல் வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291

### வடக்கு கிழக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

த்த ஜனாதிபதியின் ஆணையைக் காத்திருப்பதாக சென்ற வாரம் கூறினார் பின்பு இலங்கைப் பொலிசும், மாகாண தொண்டர் படையும் பாதுகாப்பில் ஈடுபடும் என்றார்.

இதுதொடர்பாக நிதானமிழந்து இலங்கை அரசு நடந்ததை அவதானித்த மாகாண முதல்வர் சென்ற செவ்வாய்கிழமை கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இது தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

முடிவில் இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தமிழ் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக மகாண முதல்வரின் பூரண சம்மதம் கிடைத்த பின்பே அவ்வப் பகுதிகளில் இருந்து இந்தியப்படை வாபஸ் பெறும்.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக நிறுத்தப்படும் தமிழர்களின் படை தமிழர்களின் பாதுகாப்புக்குப் போதுமானது என்பது சில நாட்களில் உறுதிப்படுத்தப்படும்.

இந்தியப்படை கட்டம் கட்டமாக விலக ஆரம்பிக்கும் காலத்தில் தமிழ்பகுதிகளில் நிலை கொண்டுள்ள இலங்கை இராணுவத்தின் விஷேட அதிரடிப்படைப் பிரிவுகள் முற்றாக விலகிக் கொள்ளப்படவேண்டும்.

இம்மேற்கண்ட முடிவுகள் இந்தியா, இலங்கை உயர் அதிகாரிகள் முன்பாக எடுக்கப்பட்டன.

16-ந் திகதி அம்பாறையில் இருந்து முதற்கட்டமாக இந்தியப்படை விலகுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன்படி 190 வண்டிகளும் இந்தியப்படை வீரர்களும் முகாம்களிலிருந்து புறப்பட்டனர்.

ஆனாலும் இலங்கை அரசு ஒப்புக்கொண்ட பிரகாரம் இந்தப் பகுதியில் இருந்து வரும் இலங்கை இராணுவ விசேட அலுவலர் படையை வாபஸ் பெறவில்லை.

இதனை மாகாண முதல்வர் தற்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மாகாணங்களிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறுவதனால் இலங்கை இராணுவ விசேட அதிரடிப் படைகளை உடனே அழைக்குமாறு முதல்வர் இலங்கை அரசுக்கு கூறிவிட்டார்.

இலங்கை அரசு இலங்கை இராணுவத்தை தொடர்ந்தும் தமிழ்ப்பகுதிகளில் வைத்திருக்கவே விரும்புகிறது எனத் தெரிகிறது.

## முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். சொல்கிறார்
## இந்திய - இலங்கை சமாதானஒப்பந்தத்தை இரு நாடுகளுமே நிறைவேற்றியுள்ளன

(கொழும்பு)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட அம்சங்களை இருநாடுகளுமே நிறைவேற்றிவிட்டன. இதற்கு இலங்கை அமைச்சரவையும், பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி எம். பி க்களதும் ஒப்புதலும் கிடைத்துள்ளனஎன முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

'அரசியல் தலைமை' என்ற பொருளில் அவர் கருத்துரை வழங்கினார். தொடர்ந்து பேசிய திரு. ஜெயவர்த்தன. யுத்தத்தையோ சமாதானத்தினையோ அறிவிக்கும் அதிகாரத்தை இலங்கை அரசியல் சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கு கிறதெனச் சுட்டிக்காட்டினார்.

1987 அக்டோபரில் ஒப்பந்தத்தை சில தீவிரவாதிகள் மதிக்கத் தவறியதால் இந்தியப்படை அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க நேர்ந்தது என்றார்.

தம்மைவிட திரு. பிரேமதாஸா ஒரு அதிர்ஷ்டசாலி என்றும் சில தமிழ்க்குழுவினரை தேசிய நீரோட்டத்திற்குக் கொண்டு வந்ததும் அவரின் அதிர்ஷ்டம் தான் என்றார்.

தலைமை தாங்கும் ஒருவர் சாதாரண சமயத்திலோ நெருக்கமான கட்டத்திலோ நெருக்கடிகளுக்குப் பணிந்துவிடக்கூடாது எனக் குறிப்பிட்ட அவர் நாட்டின் ஸ்திரத்தன்மையைக் காப்பாற்ற ஓர் அரசியல் தலைவனுக்கு இது மிகவும் தேவைப்படும் அம்சம் என்றும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org